அறிமுக நூல் – 12

மலைபடுகடாம்

இரா.இளங்குமரனார்

அறிமுக நூல் வரிசை – ௧௨

மலைபடுகடாம்

இரா. இளங்குமரன்

அறிமுகத்திற்கு அறிமுகம்

தொடக்க நாளிலேயே 'செந்தமிழ்' எனப்பட்ட நம்மொழி, இப்பொழுது 'செம்மொழி' என்னும் சிறப்பை நடுவண் அரசால் அடைந்திருக்கிறது. அத்தகுதிக்குக் காரணமாக இருந்த நூல்களை எல்லாம் இளம்பருவ மாணவர்களும், ஓரளவே தமிழ்ப் பயிற்சியுடைய பெரியவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் 'அறிமுகநூல்கள்' வெளியிட வேண்டும் என்று அவாவினார், அன்புத் தோன்றல், செயல்வீறுமிக்க தன்மானத் தமிழர், புரட்சிக் கவிஞர் மன்ற நிறுவனர் தமிழ்த்திரு **பி.வரதராசனார்**. அவர் விருப்பை நிறைவேற்றும் வகையிலும், என் எண்ணப்பதிவும் அதில் ஒன்றியதாலும், தொடர்ந்து செம்மொழிக்கு உரியவும் பிறவகையால் தமிழ்வளமாவதுமாம் கலை வள நூல்களையும் அறிமுக நூல்களாக வெளியிட இசைந்தேன்.

அவ்வரிசையில் தொல்காப்பியம், திருக்குறள், திருமுருகாற்றுப்படை, பொருநர்ஆற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் எனத் தொடர்கின்றன.

முன்னைத் தொல்காப்பிய, திருக்குறள் அறிமுக நூல்கள் பெற்ற வரவேற்பும், அவ்வெளியீட்டில் கண்ட விற்பனைப் பெருக்கமும், பருகுவார் போல் கேட்ட அவையச் சிறப்பும், பரப்புதல் உந்துதல் அவர்களுக்கு உண்டாகிய தமிழ்ப்பயனும், நூலாசிரியனுக்கும், வெளியீட்டினர்க்கும் பேருவகை ஆவதாம்! 'தமிழ்மொழி' 'இனமீட்பர் பெருகுவர்' என்னும் நம்பிக்கையைப் பெருக்குதல் நற்பேறாம். ஆதலால், இத்தொடர் தொய்வின்றித் தொடர்வதுடன், பெருக்கத் தொடராகச் சிறக்கத் தூண்டும் என்பதும் உறுதியாம்.

பரப்பாளர் என்பார், புரப்பாளருமாம் சிறப்பு வெளிப்பாடு இஃதாம்.

வாழிய நலனே!

வாழிய நிலனே!

இன்ப அன்புடன்,

இரா.இளங்குமரன்

திருவள்ளுவர் தவச்சாலை,

அல்லூர், திருச்சி-620 101

நாள்
22-02-2015

வெளியிட்டு மகிழும்



புரட்சிக் கவிஞர்
மன்றம்

75, வடக்குமாசி வீதி, மதுரை-1
அலைப்பேசி : 94437 10219

அச்சிட்டு மகிழும்



மணியம்மை

மழலையர் தொடக்கப்பள்ளி

வடக்குமாசி வீதி, மதுரை-1

தொலைப்பேசி : 0452 2626111

அறிமுக நூல் வரிசை - 12

மலைபடுகடாம்

★ 'மலைபடுகடாம்' இயற்றியவர் எவர்?

பத்துப்பாட்டில் பத்தாவதாக அமைந்துள்ளது மலைபடுகடாம். இதனைப் பாடியவர், மதுரையைச் சார்ந்த யானைமலைப்பகுதியைச் சேர்ந்த இரணிய முட்ட நாட்டினராம்; இவர் பெருங்குன்றூர் பெருங் கௌசிகனார் என்பார். இவர் பாடல்கள் நற்றிணையில் இரண்டு உண்டு.

★ மலைபடுகடாத்தின் பாட்டுடைத் தலைவன் எவன்?

மலைபடுகடாத்தின் பாட்டுடைத் தலைவன், திருவேங்கடப் பகுதியாகிய 'பல்குன்றக் கோட்டத்துச் செங்கண் மாத்துவேள் நன்னன்சேய் நன்னன்' என்பான். செங்கண்மா என்பது திருவண்ணாமலைப் பகுதியில் உள்ள செங்கம் ஆகும். நன்னன் ஆண்ட நவிரமலை இப்பொழுது திரிசூலகிரி என வழங்குகிறது (579). இப்பாடல் 583 அடிகளையுடையது. 'குன்றுசூழ் இருக்கை நாடு கிழவோனே' என இவன் நாட்டின் பெயரைச் சுட்டி முடிகிறது (583).

★ மலைபடுகடாம் பெயர்க் காரணம் என்ன?

'மலைக்கண் உண்டாகும் ஓசை' எனவும், மலைபோலும் யானையின் மதநீர் எனவும் பொருள் தருவது இது.

"மலைபடுகடாஅம் மாதிரத்து இயம்ப"

என இப்பாடலில் இடம் பெற்றதொடர் அறியத்தக்கது (348)

★ மலைபடு கடாத்துக்கு அமைந்த வேறு பெயர் என்ன?

மலைபடு கடாத்துக்கு அமைந்த வேறு பெயர் கூத்தராற்றுப்படை என்பதாகும். பாணனையும் (40) விறலியையும் (46) நோக்கிக் கூறுவதாக வருகின்றது.

பாணர் பொருநர் கூத்தர் விறலியர் என்பார் பாடலும் ஆடலும் இசைக் கருவி இயக்கலும் வல்ல கலைவல்லார் ஆவர்.

அவரை நன்னனிடம் ஆற்றுப்படுத்தலால் கூத்தராற்றுப்படை எனப்படவும் ஆயிற்று.

★ மலைபடு கடாம் என்றும் அரிய பெயரை எண்ணும்போது தோன்றும் ஊர்ப் பெயர் எது? விளக்குக.

மலைபடுகடாம் என்னும் நூற்பெயரை எண்ணும்போது தோன்றும் ஊர்ப்பெயர் மதுரை மாவட்டத்துப் பெரியகுளம் தேனி சார்ந்த கடமலைகுண்டு ஆகும். கடமலையாம் - மதமலை போல்வதாம் - யானையைப் பிடிக்கும் ஆழ்ந்த பள்ளத்தாக்கு என்பது அப்பெயராம்.

மேல்மலை அடிவாரத்தது அது. இயற்கைக் கொழிப்புடையது. மயிலாடும் பாறை, மந்திச்சுனை, ஆலந்தளி என்னும் இயற்கைப் பெயரீடுகள் கொஞ்சும் சூழலவை.

★ மதுரைசார் புலவர் வேங்கடம்சார் வேந்தனைப் பாடியது ஏன்? விளக்குக.

பாடிப் பறக்கும் வானம் பாடிப் பறவை அனையது பழநாள் புலமையர் வாழ்க்கை. அவர்கள் வாழ்வை, அவ்வாறேவாழ்ந்த அமைதித் தூதர் கோவூர் கிழார்,

“வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
நெடிய என்னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி
ஓம்பாது உண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை”

எனச் சொல்லோவிய மாக்கிக் காட்டுதல் விளக்கமாம்.

★ நன்னன் மேல் 'ஆற்றுப்படையாம்' மலைபடு கடாம் பாடுவானேன்?

பெருங்குன்றூார் பெருங் கௌசிகனார் நன்னனிடம் பெற்றபரிசிலின் நன்றிக் கடனாகவும், தாம் பெற்ற நலத்தைத் தம்மைப்போல் பிறரும் பெறவேண்டும் என்னும் பேருள்ளத்தாலும் பாடினார். அவர் பாடிய பாடலே அவனுக்கு அழியா வாழ்வு தந்து காலத்தை வென்று நின்று இன்றும் அவன் புகழ்ப் பறையாக விளங்குகிறது; அன்றியும் பழந்தமிழ் வளமாகச் சிறக்கின்றது; வரலாற்றுப் பேறாகவும் வாய்க்கின்றது.

★ கூத்தர்கள் கொண்டிருந்த இசைக் கருவிகளாக ஆசிரியர் கூறுவன எவை?

வான் முழங்கும் இடியன்ன மத்தளம்; வெண்கலத்தால் ஆக்கப்பட்ட கஞ்சக் கருவி; மயிலிறகும் தழையும் கட்டப்பட்ட

ஊதுகொம்பு; யானையின் கையன்னவங்கியம்; இளி என்னும் ஓசை எழுப்பும் குறுந்தூம்பு; பாடலிசைக்கு ஏற்ப இசைக்கும் குழல்; சமனோசை செய்யும் கரடிகை; தாளம் தரும் எல்லரி; மாத்திரை காட்டும் ஒரு கண் மாக்கிணை; இன்னும் சிறுபறைமுதலிய கருவிகளைக் கூறுகிறார் ஆசிரியர்.

★ கூத்தர் செல்லும் வழி எத்தகையது?

கூத்தர் செல்லும் வழி, கரடுமுரடான காட்டு வழி; முட்செடிகள் உள்ளன; நட்டுவைத்தாற் போன்றகற்களையும் பாறைகளையும் உடையது; மலையை உடைத்து அமைத்த ஒடுங்கியதும் நெட்டுயரம் உடையதுமாம் வழி அது. வழியில் செல்வார்க்கு அச்சம் உண்டாகா வகையில் அரசர் ஆணைப்படி, காக்கும் வில்லுடைய கானவர் உளர். வழிப்பறிப்புச் செய்வார் உண்டு என்னும் அச்சம் இல்லாமல் செல்லலாம் அவ்வழியில்.

★ பேரியாழ் பற்றியும், பாணர் பற்றியும் அறிவன எவை?

பாணர் வைத்திருக்கும் யாழ், பேரியாழ். மகளிர் அணியும் வளையல்களைப் போல ஒன்பது வார்க் கட்டுகளை உடையது. யாழமைப்புக் குறித்த இலக்கண நூலாம் நரம்பின் மறைகூறியவாறு அமைந்தது; நரம்பு மிக முறுக்கினால் விழும் கொடுமுறுக்கு இல்லாதது. அதன் பத்தல் வரகங்கதிர் வரிசை போல நுண் துளைகள் செய்து துளைகள் நிரம்பச் சுள்ளாணி அடிக்கப்பட்டது. பசை (பயின், பிசின்) தடவப்பட்ட பொன்னிறத் தோலால் போர்த்தப்பட்டது. மகளிர் உந்தியில் இருந்து மார்பு வரை செல்லும் மயிரொழுங்கு உடையது யாழின் உந்தி. யாழின் தண்டு கழாக்கனியின் நிறத்தையுடையது. வேந்தரவையில் பாராட்டத்தக்க வகையில் மீட்டும் கலைவள மிக்கவர் பாணர்.

★ நன்னனிடம் பரிசில் பெற்று வந்த கூத்தன், பரிசில் பெறுவதற்கு உரிய இடம் நாடி வந்த கூத்தனுக்கு என்ன சொல்கிறான்?

"வழி நடந்த களைப்பினால் தண்ணிய பொய்கையில் ஆடினால் போன்றநல்ல நிழலில் அமர்ந்திருக்கும் கூத்தனே, மலையில் பெய்த மழையால் அருவியாகக் கொழித்து ஆறாகிக் கடலில் கலக்கும் விரைவு போல யான் நன்னனை நாடிச் சென்று நல்ல பல பரிசில்களைப் பெற்று வந்தேன். நீங்களும் பழம்பழுத்த பருவ காலத்தே பழமரத்தை நாடும் பறவைகளைப் போல நீங்களும் செல்வீர்களாக" என்றான்.

★ நன்னனைப் பற்றி ஆற்றுப்படுத்துவான் கூறுவதென்ன?

எழில்மிக்க மாலையை மார்பில் சூடியவன் நன்னன். நல்லெழிலும் நயத்தக்க பண்புகளும் அமைந்த மகளிரை மணந்தவன்; நாவை ஏராகக் கொண்டு புலமை உழவு நடத்தி விளைவு கண்டு மகிழும் புலவராம் உழவர்க்குப் புது வெள்ளப் பெருக்குப் போல வாரி வழங்கும் வண்மையாளன். வில்லாற்றலில் சிறந்தான்; அவன் எமக்கு வழங்கிய பரிசில்கள் இவை. நீவிரும் சென்று இத்தகைய பரிசில்களைப் பெற்று வாழ்வீர்களாக" என்றான். மேலும், "நீங்கள் புறப்பட்ட பொழுதும் வழியும் நல்லனவாக அமைதலால் நாம் சந்திக்க வாய்ந்தது. அவன் இருக்கும் இடத்தையும், அவ்விடத்திற்குச் செல்லும் வழியையும், வழியின் நலத்தையும், தீமையையும், நீவிர் தங்கும் இடங்களையும், அவன் நாட்டின் விளைவையும், மலை, சோலை ஆயவற்றின் தன்மைகளையும், காட்டின் இயல்பையும் முறையே யான் கூறுவேன் கேட்பீராக" என்றான.

★ நன்னன் இருக்கும் இடம் எது? அதன் சிறப்பென்ன?

நன்னன் இருக்கும் இடம் நவிரம் என்னும் மலையாகும். அம்மலையில் நஞ்சுண்ட இறைவனாம் நீலகண்டன் வீற்றிருப்பான். கதிரோன் காரிருளை ஒழிப்பது போலப் பகையை ஒழித்தவன் நன்னன். கற்றவர் சூழல் மிக்கவன்; கல்வியில் குறைந்தவர் எனினும் அவர் குறையை நிறைவித்து மேம்படுத்தும் சான்றோர் கூடிய பெருமையது நன்னன் அவை. வீறுமிக்க போர் வீரர்க்கு ஊர்கள் வழங்குபவன் நன்னன். அவன் உறையும் ஊர் முதலை உலாவும் அகழிவையும், வானளாவும் மதிலையும் உடையது என்று நன்னன் இருக்கும் இடத்தையும் அதன் சிறப்பையும் ஆற்றுப்படுப்போன் கூறினான்.

★ நன்னன் நாட்டுக்குச் செல்லும் வழியைச் சுருக்கிக் கூறுக.

மழை நிரம்பப் பொழிவது நன்னன் நாட்டுக்குச் செல்லும் வழி. எள் வளமாக வளர்ந்த வாளமான கரிய முற்றிய காய்களைத் திரளப் பெற்றிருக்கும். யானையின் கையை ஒத்ததாகத் தினைக்கதிர் முற்றிப் பருத்துத் தொங்கும். தினை அரியப்பட்ட தட்டைகளில் அவரைக் கொடி பின்னிக் கிடக்கும். எருமைகள் படுத்துக் கிடந்தாற் போலப் பாறைகள் நிரம்பிய பகுதிகளில் வரகுக் கதிர்கள் தடித்து விளைந்திருக்கும். தோரை என்னும் நெல் விளைந்து அவலாக இடிக்கும் பருவத்தில் இருக்கும்.

தோட்டங்களில் கொத்தி விதைக்கப்பட்ட கடுகு, இஞ்சி, கவலைக்கிழங்கு எடுக்கும் நிலையில் முதிர்ந்திருக்கும். வாழைப்பழம் முதிர்வுற்றும், மூங்கில் நெல் முற்றியும் வளமாக இருக்கும். பாறைகளில் நாவல்கனிகள் உதிர்ந்து கிடக்கும். கூவைக்கிழங்கும் முற்றியிருக்கும். மாம்பழம் பழுத்துக் குலுங்கும்; பலாப்பழம் முற்றி வெடித்துக் கமழும்; ஐவன நெல்லும் வெண்ணெல்லும் விளைந்திருக்கும்; கரும்பு முதிர்ந்து ஆலைகளில் ஆட்ட அறுவடை செய்யப்படும். அவ்வழி இத்தகைத்தாக அமைந்திருக்கும்" என்றான் ஆற்றுப்படுப்போன்.

★ கூத்தன் தங்கத் தக்க இடமாகக் கூறுவது எதனை? ஏன்?

செங்காந்தள் பூவை ஊன் தசையாக எண்ணிய கழுகு அதனை எடுத்துத் தசை அன்று என்று பாறையில் போட்டுவிடும். அவ்விடம் வேலன் வெறியாடு களம் போல் தோற்றம் தரும். அங்குள்ள சிறு குடிகளில் வாழும் கானவர் தேன் கிழங்கு பன்றி இறைச்சி முதலியவற்றைப் பனைஓலையால் முடைந்த பெருங்கூடைகளில் எடுத்துச் செல்வர். அவர்கள் ஊரில் தங்கினால் உங்கள் சுற்றத்தாருடன் அவ்வுணவுகளை உண்டு மகிழலாம். அங்கு இரவு தங்கி விடியலில் செல்லலாம்.

★ சிறுகுடியில் இருந்து செல்லும் வழியாகக் கூறுவது எது?

"சிறுகுடியில் இருந்து சிவந்த பூக்களையுடைய அசோகமரம் விளங்கும் வழியில் செல்லுக. மேலும் சிற்றூர்கள் வரும். நன்னனின் கூத்தர்யாம் என்று கூறினால் உங்கள் நடைத்தளர்வு நீங்கிச் செல்லுமாறு தங்கச் செய்து தினைச்சோறும், நெய்யிற்பொரித்த ஊன் கறியும் தந்து உண்ண வைப்பர்.

அங்கிருந்து மேலே நடந்து நன்னன் நாடு சென்றால் இதனிலும் மேம்பட்ட உடும்பின் இறைச்சி, கடமான் தசை, கள்தெளிவு முதலியவற்றைநிரம்பப் பெறலாம். நெல்லால் ஆக்கப்பட்ட மதுவும் பருகக் கொடுப்பார்" என்றார்.

★ மலைநாட்டினர் வரவேற்றுச் சிறப்பிக்கும் வகையை வரைக.

மலைவாணராம் குறிஞ்சி நிலமகளிர், பலா விதையின் மாவு, புளியம் பழத்தின் பிழிசாறு, மோர் முதலியவற்றைஅளவோடு கலந்து காய்ச்சி, வெண்சோற்றுடன் கலந்து தம்மக்களை விடுத்து முறைசொல்லி அழைத்து ஊண் வழங்கித் தங்கச் செய்வர். மேலும்

மலைமேல் இருந்து அவர்கள் கொண்டு வந்த அரிய பொருள்களையும் வழங்குவர். நன்னன் வழங்கும் பரிசைப் பெறச் செல்லும் உங்கள் செலவு மறந்து தங்கி விடவும் செய்வீர். அவ்வாறு தங்கிவிடாமல் செல்வீராக என்றான்.

★ மேலே செல்லும் வழிபற்றி ஆற்றுப்படுப்போர் எச்சரிப்பது என்ன?

"மேலே தினைப்புனங்கள் மிக உண்டு. அவை கதிர் முற்றியிருத்தலால் அதனைத் தின்னவரும் பன்றியைப் பற்றுவதற்காகக் 'கல்லடார்' என்னும் பொறி வைத்திருப்பர்.ஆதலால் இரவில் செல்லாமல் தங்குவீராக. மேலும் பாம்புகளும் நிலவெடிப்புகளில் கிடக்கும். கொடிய விலங்குகளும் திரியும்; அவ்வழியை நீங்கி வலப்பக்கம் உள்ள வழியில் செல்வீராக" என்று எச்சரித்து வழிகாட்டினான்.

★ வலப்பக்க வழியைப் பற்றி அவன் கூறுவன எவை?

"யானைகள் தினைப் புனத்தில் புகுந்து அழிவு செய்து விடாவாறு பரணில் இருந்து காவல் காப்போர் கவண்கல் ஏவுவர். குரங்கும் அதன் குட்டியும் மூங்கில் மேல் ஏறித் தாவித் தாவி விரைந்து வரும்.

காட்டாற்றில் யானையையும் விழுங்கும் முதலைகளும் உண்டு. காவற் காடும் அகழும் போன்றஅவ்விடத்தை எச்சரிக்கையுடன் கடக்க வேண்டும். கரைகள் வழுக்குவன ; மரக்கிளை, விழுது ஆயவற்றைப் பற்றிக் கொண்டு ஒருவரை ஒருவர் பாதுகாத்துச் செல்லுதல் வேண்டும். இன்னும் பாசியும் கிடந்து சறுக்க வைக்கும். மூங்கில் கோலையும் கொறுக்கந் தட்டையையும் ஊன்றியும் பற்றியும் கொண்டு நடந்து செல்லுதல் வேண்டும். பழமையான மதிலமைந்த ஊரொன்று உண்டு. அதன் அருகே ஆறும் உண்டு; அங்கே பற்றற்ற துறவர் உளர். அவரை வணங்கல் அன்றி உம் கருவியை இசையாமல் கடந்து செல்க.

★ நவிரமலைக் கான்வளம் எத்தகையது? அக்காட்டில் செல்லும் வகை எது? சுருங்கச் சொல்க.

மயில் ஆடும்; மந்தி பாயும்; அவற்றைக் காணாமல் செல்க. அவ்வாறு செய்யாவிடின் வழிதப்பிப் போவீர்; கானவர் உயரமான பரணில் இருந்து ஏவிய அம்புபட்டிறந்த பன்றிகளைக் காண்பீர்கள். அவற்றைவாட்டித் தின்று சுனை நீரைப்பருகுவீர்!

அப்பெரிய பன்றியின் தசையை முழுமையாக உண்டு விடாமல் கட்டிக் கொண்டு செல்வீர்!

அங்குள்ள மலைக் குகைகளில் இரவுப்பொழுது தங்குவீர்; விடிவு அறிந்து புறப்பட்டுச் செல்க.

வழியில் யானையையும் விழுங்கும் பாம்புகளும் கிடக்கும். அவ்வழியைக் கண்டு விலகிச் செல்க.

தீயகனி மரங்களும் உண்டு; அக்கனிகளைப் பறித்து உண்ணாதீர்; நச்சுத் தன்மை உடையன அவை.

அப்பால் மரங்கள் அடர்ந்த காடுகள் உண்டு. வேட்டையாடும் கானவரும் வழிமயங்கத் தக்கது அது. வழியறிந்து சென்று ஆங்குள்ள குன்றில் ஏறி உங்கள் இசைக் கருவிகளை இயக்குங்கள். ஆங்குள்ள கானவர் ஓடிவந்து உங்களை அழைத்துச் செனறு இனிய கனிகளை வழுங்குவர்; பின்னர் அவர் கூறிய வழிப்படியே நடந்து தக்க நிழலில் தங்குவீர்களாக என்று கான்வனத்தையும் வழியையும் சொல்கிறான்.

★ 'மலைபடு கடாம்' என்னும் பொருள் புலப்படப் பாடல் எவ்வெவ்வோசைகளைக் கூறுகிறது? வழியனுப்புவோன் கூறுவது என்ன?

நீராடும் அணங்கினர் வளையவந்து ஆடிப்பாடும் ஓசையும்,

தினையுண்ண வந்த யானையைப் பிடிப்பதற்குக் கானவர் எழுப்பும் ஓசையும்,

முள்ளம் பன்றியால் தாக்குண்டு இறந்தவர்க்காக அழும் ஓசையும்,

கணவன் மார்பிலே புலி பாய்ந்து உண்டாக்கிய புண்ணை ஆற்றஇசைக்கும் மகளிர் ஓசையும்,

பூவைப் பறிப்பவர் 'புலிபுலி' என ஒலித்துப் பறிக்கும் ஓசையும்,

கருக்கொண்ட பிடிக்கு உணவு கொண்டு வந்து கொடுக்கும் களிற்றை மறைந்து நின்று புலி தாக்குதலால் பிடியும் பிறவும் எழுப்பிய ஓசையும்

குட்டியைத் தழுவ மறந்த குரங்கு, அக்குட்டி எடுக்கமாட்டா இடத்து

விழுந்து இறந்ததால் சுற்றத்தோடு அழும் ஓசையும்,

மூங்கில் கணு வேணி வழியே ஏறித் தேனெடுப்பவர் ஓசையும்

பகைவர் சிற்றரண்களை அழித்து ஆங்குக் கவர்ந்ததை நன்னனுக்கு அளிக்க முயலும் கானவர் ஓசையும்.

காலையில் கள்ளுண்டு தம் பெண்டிரொடு குரவையாடும் குன்றவாணர் ஓசையும்,

பெருங்கல்லின் மேல் இருந்து வீழும் நீரின் கல்லெனும் ஓசையும்,

யானையின் சீற்றத்தை அடக்கித் தூணிலே கட்டும் பாகர் ஓசையும்,

தினைப்புனம் காக்கும் மகளிர் தட்டைப்பறைஓசையும்,

காளையும் மரையான் ஏறும் மோதவிடும், கோவலரும் குன்றவரும் எழுப்பும் ஓசையும்,

காட்டு மல்லிகையும் குறிஞ்சியும் சிதைய எருமைக் கடாக்கள் முட்டும் ஓசையும்,

பலாப்பழ விதைகளை உடைத்துப் பயன் கொள்ளச் சிறுவர்கள்

கன்றுகளை இணைத்துப் பிணையலிடும் ஓசையும்,

கரும்பை ஆலையில் இட்டு ஆட்டுதலால் உண்டாகும் ஓசையும்,

தினையை இடிக்கும் மகளிர் எழுப்பும் வள்ளைப்பாட்டு ஓசையும்,

கிழங்கைத் தோண்டாமல் இருக்கப் பன்றியை ஓட்டுவோர் பறையின் ஓசையும்,

இவ்வோசைகளும் மலையின் மேலும் கீழும் உண்டாகும் ஓசைகளும்

சேர்ந்து மலையாகிய யானை ஒலிக்கும் ஓசையுடன் கூடி

'மலைபடுகடாம்' என விளங்கும்.

இவ்வோசைகளைக் கேட்டும், ஊரில் உண்டாம் முழவோசையினால் ஊரிலுள்ள துயிலறியாமல் இருப்பதைக் கண்டும் கேட்டற்கு அரியவை கேட்டும், காணற்கரியவை கண்டும், உண்ணற்கு அரிய உணவுகளை உண்டும் தத்தம் ஊரில் தத்தம் உறவொடு தங்குவார் போலத் தங்கிப் பன்மலையைக் கடந்து விறலியர் குறிஞ்சிப் பண்பாட நீவிர், “எம் எண்ணம் நிறைவேறினால் இன்ன படையல் செய்வோம்” எனத் தெய்வத்தை வேண்டிச் செல்வீராக என்றான்.

★ அப்பால் செல்லும் வழியை எப்படிச் செல்ல ஆற்றுப்படுப்போன் கூறுகிறான்?

அப்பால் செல்லும்போது கருமுகில் கையில் அள்ளும் படியாய்க் கிடந்து மழைத் துளியை அள்ளி எறியும். உங்கள் இசைக் கருவிகள் நனையும்; நீங்களும் நனைவீர்கள், தக்க குகை இடம் கண்டு தங்குவீர்களாக. அப்பெரிய மலைப்பள்ளங்களில் நேரும் இடையூறுகள் பல. முழவைத் தாங்கிச் செல்லும் காவு தடியை ஊன்றிக் குழிகளில் வீழாமல் செல்வீர்களாக. வெயிலில் போகாமல் மாலைப் பொழுதில் போவீராக!

யானைப் படையுடைய வலிய அரண்கள் அங்கே உண்டு. கொடிகள் மிக்கனவாய்க் காடுகள் செறிந்தனவாய்ச் சிறு வழிகள் பல தோன்றும். செடிகளால் தாக்குண்டாகாமலும், கருவிகள் சிதைவடையாமலும் அவற்றைவிலகிச் செல்வீராக.

வஞ்சி வீரர் தாக்குதலால் உயிர்நீத்து அமரராகியவர் புகழை எழுதி நடப்பட்ட நடுகற்கள் பல உண்டு. அவ்வீரர் புகழை யாழில் இசைத்துச் செல்வீர்களாக.

வழியறியாமல் சென்று மேலும் செல்ல முடியாமல் முட்டடிபட்டுத் திரும்ப நேரின் அவ்விடத்திற்குப் பிறர் போய் இடர்ப்படாவாறு அவ்வழி பிரியும் இடத்தில் அடையாளமாக ஊகம்புல்லைக் கட்டாகக் கட்டி வைப்பீர்களாக என்று மேலும் செல்லும் வழியைக் கூறினான்.

★ நன்னனின் பகைவர் காட்டும் பரிவாக அறியதென்ன?

"நன்னனின் பகைவர் செல்லும் வழியில் உளர். அவர்கள் நினைக்கவும் கொடுமையான பாலைநில வாழ்வினர். அவர்களிடம் நன்னனிடம் பரிசில் பெறப் போகின்றோம் என்று நீங்கள் கூறுவீர்களாயின், அவர்கள் உங்களுக்குத் துயர் செய்யார். மற்றை ஊர்களைப் போலவே அச்சமில்லாமல் செல்லலாம்" என்றான்.

★ அப்பாலுள்ள காட்டின் நிலையாக வழிகாட்டுபவன் கூறுவதென்ன?

அப்பாலுள்ள காட்டில், புலியால் கொல்லப்பட்ட பெண் மானை நினைத்து ஆண் மான் அலறும்; வேடர் அம்புக்கு அஞ்சிய ஆண் மரை தாவி ஓடும். காட்டில் மேயச் சென்றுள்ள ஆன்களின் பால் கறந்து ஆயர் வீடு கொண்டு வந்து சேர்ப்பர். அவ்விடத்தை அடைந்தால் அவர்கள் தக்க விருந்து வழங்குவர்.

பண்டங்களை விற்றலால் பண்ட மாற்றாக வழங்கப்பட்ட பலவகை நெல்லையும் ஒருங்கே இடித்த அரிசி போன்றபல நிறங்களையுடைய செம்மறியாடுகள் வெள்ளையாடுகளுடன் கலந்து ஓசையிடும். இக்காட்டில் நீங்கள் செல்லும்போது தங்களுக்கென்று சமைக்கப்பட்ட உணவை உங்களுக்கு வழங்குவர். ஆட்டுத் தோலைத் தைத்து ஆட்டு மயிரைப் பஞ்சாக அடைத்த படுக்கையில் ஆயர்படுப்பர். குளிருக்காக நெருப்பு மூட்டிக் குளிர் காய்வர். அவ்விடத்தில் நீங்கள் தங்கிச் செல்வீராக. அடுத்து நாட்டைக் காக்கும் காவலர் கூட்டத்தை கண்டால், நன்னனைக் காணச் செல்கிறோம் என்று சொல்லுங்கள். அவர்கள் கிழங்குகள் உண்ணவும் கள் பருகவும் தருவர். அங்குத் தங்கிச் செல்வீராக. அடுத்து ஒரு மேட்டு நிலம் எய்தும். அங்கு நல்ல நீர் உண்டு. நன்கு பருகி, மேலும் பருகுவதற்கு எடுத்துக் கொள்வீர்களாக. அப்பால் புல்வேய் குடிசைகள் இருக்கும். அவ்விடத்துத் தங்கினால் அவரை விதை மூங்கில் அரிசி ஆயவற்றைப் புளி கரைத்து ஆக்கும் உலையில் இட்டுக் கூழாக்கிய

உணவை அங்குள்ளார் வழங்குவர். நடைக்களைப்பும் பசி இளைப்பும் நீங்க அதனைப் பருகி அங்குத் தங்கிச் செல்வீராக. சில நாள்கள் தங்கின் இறைச்சி கலந்த நெய்ச் சோறு, தினைமா முதலியவையும் தருவர். நெருப்பு மூட்டிப் பனிக் கொடுமை நீக்கி உதவுவர்" என வழிகாட்டி விரித்துக் கூறினன்.

★ நன்னன் நாட்டு வளம் எத்தகையது? அங்கு எவ்வாறு செல்ல வேண்டும் என்று கூறுகிறான்?

நன்னன் நாடு மருதமரம், காஞ்சி மரம் மிக்கது. ஆறும், வயலும் பொழிலும் குடியிருப்புகளும் செறிந்தது. அங்குப் பல்வகையான சுவைமிக்க உணவுகளைப் பெறலாம்.

ஆங்குள்ள வலையர், வலைவீசிக் கொண்டு வந்தவரால் வாளை ஆகிய மீன்களை நெல்லரிசிக் கள்ளுடன் பெறலாம்.

நெல்லறுப்போர் கொட்டும் பறைக்கு அஞ்சித் தன் கூட்டத்தைப் பிரிந்த எருமைக் கடமா வெறித்துச் செல்லும். வாய்த்தலைகளில் நீர்ச் சுழல்கள் உண்டு என்று நாட்டு வளத்தையும், செல்ல வேண்டும் வகையையும் வழிகாட்டி கூறினான்.

★ நன்னன் நகர் எத்தகையது?

நன்னன் நகர் பழமைமிக்கது; மாட மாளிகைகளை உடையது; உயர்ந்த மதிலைக் கொண்டது; பேரொலியுடைய அங்காடித் தெருக்களைக் கொண்டது. பலவழிகளையுடையது கோபுரம். அதன் சுவரில், காவலர் தம் வேலைச் சார்த்தி வைத்துக் காவல் புரிவர். ஆயினும் நீங்கள் ஐயமும் அச்சமும் இல்லாமல் புகலாம். ஆங்கு அம்பலங்களில் முன்னே சென்றகூத்தர்கள் உங்களைக் கண்டு நன்னனிடம் பரிசில் பெறவருபவர் என்று மகிழ்வுடன் பார்ப்பர். உங்கள் தனிமை அகல உங்களை விருந்தாக ஏற்பர்; அங்குத் தங்குவீராக என நன்னன் நகர நிலையைக் கூறினான் வழிகாட்டி.

★ அரண்மனைக் காட்சியும் நன்னன் கொடையும் பற்றி வழிகாட்டி கூறுவன எவை?

அரண்மனைத் தலைவாயிலில் ஆமாவின் குட்டி, யானைக் கன்று, கரடிக்குட்டி, எண்கால் வருடை, கீரி, மரையான் கன்று, உடும்பு, மயில், கோழி, சேவல், பலாப்பழம், மாம்பழம், நறைக்கொடி, நூறைக்கிழங்கு, மாணிக்கம், யானைத் தந்தம், பல்வகைப் பூக்கள், மிளகுக் கொத்து, கள், எருமைத் தயிர், முதலியவை 'மலையில் இருந்து கடல்புகும் காவிரியின் முகத்துள்ள புகார் போலக் கிடக்கும்.

அதனைக் கடந்து சென்று நன்னனைக் கண்டு முழவையும் குழலையும் இயக்கி இறைவரைப் பாடுவீராக; நன்னனை வழக்கம்போல் வாழ்த்துவார் வாழ்த்த, நீங்களும் வாழ்த்தி, “உன் முன்னோர் பலர் வண்மையராக விளங்கினர். அவர்கள் இன்றில்லை; உன் புகழ் என்றும் குறையா வகையில் கொடைக் கடன் புரிந்து வாழ்வாயாக என்று பல நல்ல புகழ் மொழிகளைக் கூறுவீராக. அதனை முழுமையாகச் சொல்லவிடாமல் தடுத்து, 'வழிவந்த வருத்த மிகுதி' என்று கூறி வழக்கம்போல் பலரும் காண இருக்கும் இடத்தே இருப்பான். அங்கே ஆட்சியும் அமைச்சும் வளமும் வாய்ப்பும் இருந்து ஈயாராய் இறந்தார் உலகில் சேயாற்றுமணலினும் பலர். ஆதலால் நமக்கு வரம்பிட்ட காலம் வரை புகழோடே வாழ்தல் முறை” என எண்ணுவான்.

உங்கள் பழைய உடைகளை நீக்கிப் புத்துடை உடுத்த வழங்குவான். பல நாள் தங்கினாலும் சோறும் கறியும் உண்டு மகிழச் செய்வான். குறைவிலாப் பொருள்கள் தேர் யானை ஆன் கூட்டம் குதிரை ஆகியவற்றைவழங்குவான். பொற்றாமரை நீ சூடவும், விறலி பொன்னணி அணியவும் முதல் நாளிலேயே வழங்கி மறுநாள் போக விடுப்பான். இனிது சென்று நன்னன் பரிசு பெற்று நலத்தோடு வாழ்வீராக! என வாழ்த்தி அனுப்பினான் வழிகாட்டும் கூத்தன்.

★ வழிகாட்டும் கூத்தன் தனிச்சிறப்பாக நாம் அறிவன எவை?

1) வழியை மட்டும் கூறாமல் வழியில் உண்டாம் இடர்களையும் அவற்றைநீக்கிச் செல்லும் வகையையும் சொல்கிறான்.

2) வழி தவறிச் சென்றால் அவ்வழியில் பிறரும் சென்று இடர்ப்படாவாறு வழி பிரியும் இடத்தில் அடையாளமாக ஊகம் புல்லைக் கட்டாக முடித்து வைத்துச் செல்லுமாறு கூறுகிறான்.

3) திகைப்பு மயக்கம் ஏற்படும் இடத்து இசைக் கருவிகளை இயக்கின் காவலர் வந்து உதவுவர் என்பதை முற்காப்பாகக் கூறுகிறான்.

4) மிகுந்த நல்ல உணவைக் கிட்டிய இடத்தில் அவற்றையெல்லாம் உண்டு விடாமல் அடுத்த வேளைக்குப் பயன் கொள்ளும் வகையில் பாதுகாப்பாக எடுத்துச் செல்ல வேண்டும் என்பதை முற்காப்பாகக் கூறுகிறான்.

5) குறைதீர வேண்டுவோர் தம் குறைவைக் கூறும் வகையிலும் நீக்கும் முறையிலும் ஆள்வோன் அனைவரும் காணும் முற்றத்திருந்து கேட்கும் நல்லறநெறியை நயம்பட உரைக்கிறான்.

இன்னவை எந்நாளில் எவ்விடத்தில் வாழ்வார்க்கும் ஆள்வார்க்கும் வேண்டத் தக்க அரிய வாழ்வியல் நெறிமுறைகளாம்.

நன்கொடை ரூ.15/-

ஆக்கம் : பெரியார்

அறிமுக நூல் – 12

மலைபடுகடாம்

இரா.இளங்குமரனார்

ஆக்கம் பெரியார்